MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



ஜனவரி 2023



**இந்தப் பதிப்பில்:**


முக்கிய அறிவிப்புகள்

எதிர்வரும் பொங்கல், சீனப்புத்தாண்டு கொண்டாட்டங்கள்

18 டிசம்பர் 2022 அனைத்துலகப் வெளிநாட்டினர் தினக் கொண்டாட்டம் (IMD)

# முக்கிய அறிவிப்புகள்







## வெளிநாட்டு ஊழியர்களின் உரிமைளும் பொறுப்புளும்

வெளிநாட்டு ஊழியர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் முதலாளி எதை செய்ய முடியும் அல்லது எதை செய்யக்கூடாது என்று உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் மேலும் அறிந்துகொள்ள விரும்பினால் கீழ்க்காணும் இணைப்புகளுக்குச் செல்லுங்கள்

| | |
|---|---|
| சிங்கப்பூருக்கு வருவதற்கு முன்னர் | https://go.gov.sg/rightsandresponsibilities-beforearrivinginsg |
| சிங்கப்பூரில் வசித்து, பணியாற்றும்போது | https://go.gov.sg/rightsandresponsibilities-wheninsg |
| சிங்கப்பூரைவிட்டு ஊருக்குக் கிளம்பும் முன்னர் | https://go.gov.sg/rightsandresponsibilities-beforereturninghome |
| சுருக்கமான விளக்கப்படம் | https://go.gov.sg/mwrr-summary |




உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய எங்களது விளக்கப்படம் நீங்கள் ஏற்கனவே வாசித்து விட்டீர்கள் என்றால், எந்தளவுக்குப் புரிந்துகொண்டீர்கள் என்பதை அறிய சோதனை செய்வோமா?

தங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைக் குறித்து பல்வேறு வெளிநாட்டு ஊழியர்களை நாங்கள் சோதித்தபோது எடுத்த டிக்டோக் காணொளிகளைக் காணுங்கள். எத்தனை கேள்விகளுக்கு உங்களால் சரியாகப் பதிலளிக்க முடிக்கிறது என்று பாருங்கள்!

| | |
|---|---|
| டிக்டோக் காணொளி பகுதி 1 | https://go.gov.sg/rightsandresponsibilities-part1 |
| டிக்டோக் காணொளி பகுதி 2 | https://go.gov.sg/rightsandresponsibilities-part2 |
| டிக்டோக் காணொளி பகுதி 3 | https://go.gov.sg/rightsandresponsibilities-part3 |

# பொங்கல் விழா

பொங்கல் விழா

அனைத்து வெளிநாட்டு தமிழ் ஊழியர்களுக்கும்
**இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

**பொங்கல் என்றால் என்ன?**

பொங்கல் என்பது பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் அறுவடை விழாவாகும். ஏராளமான அறுவடைக்கு நன்றி செலுத்தும் நாள் இது.

**பொங்கல் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஆர்வமுண்டா?**

**ஜனவரி 15 (ஞாயிறு) அன்று முற்பகல் மணி 11 முதல் பிற்பகல் மணி 1 வரை** எங்களது கூட்டாளர்கள் ஏற்பாடு செய்திருக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்று எங்களுடன் பொங்கலைக் கொண்டாடி மகிழ **தெருசான் சமூக நிலையத்திற்கு** வாருங்கள்!





**ஜனவரி 22 ஆம் தேதி CNY எனப்படும் சீனப்புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.**
**சீனாவைச் சேர்ந்த அனைத்து வெளிநாட்டு ஊழியர்களுக்கும் இனிய சீனப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**
**உங்களுக்காக நாங்கள் ஏற்பாடு செய்திருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் குறித்து அறிந்துகொள்ளுங்கள்!**





# அனைத்துலகப் வெளிநாட்டினர் தினக் கொண்டாட்டம் (IMD) 2022

## 18 டிசம்பர் அன்று IMD முக்கிய நிகழ்ச்சி

டிசம்பர் 10 ஆம் தேதி IMD துவக்க விழாவின் வெற்றியைத் தொடர்ந்து, டிசம்பர் 18 ஆம் தேதி லிட்டில் இந்தியாவில் நடந்த முக்கிய நிகழ்ச்சியில் பெருங்கூட்டம் திளர்ந்தது.



எமது வெளிநாட்டு ஊழிய நண்பர்கள், விளையாட்டு சாவடிகள் முதல் கலாச்சார நிகழ்ச்சிகள் வரை பார்வையாளர்களைக் கவர்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகளில் பங்கேற்று மகிழ்ந்தனர்.

அனைத்துலகப் வெளிநாட்டினர் தினக் கொண்டாட்டம் (IMD) 2022 எமது வெளிந்நாட்டு ஊழிய நண்பர்களுக்கு மறக்க முடியாததாக அமைந்திருக்குமென்று நம்புகிறோம். IMD 2023 நிகழ்வில் உங்களைச் சந்திக்க ஆவலோடு இருக்கிறோம்.

## நடவடிக்கை நிகழ்ச்சி சாவடிகள்

எங்களது சமூகப் பங்காளிகள் வெளிநாட்டு ஊழிய நண்பர்களுக்காக பல்வேறு சுவாரசிய நடவடிக்கைகளைக்கையும் நிகழ்ச்சிகளையும் வரிசையாக ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சிகள் தவிர மோசடி தடுப்பு மற்றும் முதலுதவித் திறன்கள் உள்ளிட்ட பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்துகொண்ட சாவடிகள் பலவும் அமைக்கப்பட்டிருந்தன.









## விளையாட்டுகள்

IMD யின் போது எங்கள் வெளிநாட்டு ஊழிய நண்பர்கள் பங்கேற்று மகிழ, ஆர்கேட் இயந்திரங்கள் மற்றும் ஏர் ஹாக்கி போன்ற விளையாட்டுச் சாவடிகளையும் எங்கள் சமூகப் பங்காளிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.




நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் :பேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி